3 மார்ச் 2019

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 8ம் ஞாயிறு

## தி ரு மு ழு க் கு ப் பெ ற் று அ னு ப் ப ப டு த ல்



மாதாந்திர கருப்பொருள்:

**சிலுவையை சுமக்க எங்களுக்குப் பலம் தாரும்**

# திருமுழுக்குப் பெற்ற அனைவரும் அரச குருத்துவ திருக்கூட்டத்திற்கு அழைக்கப்படுகின்றார்கள்

இயேசுவை குருவாக, இறைவாக்கினராக, அரசராக நாம் காண்கின்றோம். நம்முடைய திருமுழுக்கினால் நாமும் மறு கிறிஸ்துவாக மாறுகிறோம். ஆகவே, நாமும் கிறிஸ்துவின் முப்பெரும் பணிகளான குருவாக, இறைவாக்கினராக மற்றும் அரசராக பணி செய்ய நாம் அழைக்கப்படுகின்றோம்.

**திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் ஆன்மீக இல்லத்தில் புனித குருக்களாக வாழும் உயிருள்ள கற்களாக மாறுகின்றனர்.**

(கத்தோலிக்க மறைக்கல்வி 1268)

ஆயர் ரோபர்ட் பேரன், இயேசுவைப் பற்றி இவ்வாறு கூறுகிறார். குருவாக, அவர் புனிதப்படுத்துகிறார்- கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே இழந்துபோன உறவை மீண்டும் நிலைநிறுத்துகிறார். தெய்வீக உண்மையை உள்ளடக்குகிறார்; அரசராக நம்மை நேரிய பாதைக்கு அழைத்துச் செல்கிறார், மனித திட்டங்களுக்கு வழிகாட்டுகிறார். குருவாக - அவர் வாழ்வாகவும், இறைவாக்கினராக - அவர் உண்மையாகவும், அரசராக அவர் வழியாகவும் இருக்கிறார் என்று நாம் கூறலாம்.

இன்று அவருடைய முதல் செயல்பாட்டைக் கண்ணோக்கலாம். ஒரு சாதாரண மனிதராக நீங்களும் நானும் ஒரு குருவைப் பற்றி என்ன நினைப்போம்? அர்பணிக்கப்பட்ட ஒவ்வொரு குருவானவரும் அருளடையாளங்களை வழங்குவார்கள், மறை உரை மற்றும் பங்கை நிர்வாகம் செய்வார்கள். ஆனால் பொது நிலையினருக்கும் 2 ஆம் வத்திக்கான சங்கத்தின்படி (இன்றைய உலகில் திருச்சபை) மேற்குறிப்பிட்ட பொறுப்புகள் உள்ளது.

நம்முடைய குருத்துவ அழைப்பை எவ்வாறு வாழ்வது - அன்றாட உலக காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டே “கடவுளின் அரசைத் தேடுவதில்” எவ்வாறு நாம் கடவுளின் திட்டத்தை வாழப்போகிறோம்?

நாம் எந்த நிலையில் இருந்தாலும், திருமணமானவர்களாகவோ, பெற்றோராகவோ, குழந்தைகள், உடன் பணிபுரிவோராக இருந்தாலும் நம்முடைய அன்றாட வாழ்வின் செயல்களில் அன்பு செயல்களை தியாகத்தோடு செயல்படுத்தமுடியும். பார்க்கப்போனால், பெரும்பாலான கத்தோலிக்கர்கள் திருச்சபையில் குருக்களோடு இணைந்து, திருச்சபையின் தூதுரைப்பணியை புனிதமாக மேற்கொள்ளும் பீடப்பணியாளர்களாக, வாசகர்களாக, நற்கருணை வழங்கும் நற்கருணைப் பணியாளர்களாக தங்கள் பணியை ஒருங்கிணைந்து செய்துவருகின்றனர்.

கிறிஸ்துவின் குருத்துவ பணியில் தகுதியோடு நாம் பணி செய்ய, ஒரு நல்ல தகுதியை பின்பற்ற இன்றைய ஞாயிறு நற்செய்தி நமக்குக் கூறுகிறது. சீராக்:27:4-7- - சலிக்கின்றபோது உமி சல்லடையில் தங்கிவிடுவதைப் போல நாம் பேசும் பேச்சே நம்முடைய தரத்தை தீர்மானிக்கின்றது. நாம் கிறிஸ்துவின் உண்மையான விசுவாசமிக்க சீடர்கள் என்பதற்கு நாம் கொடுக்கும் கனிகளே உதாரணம் என்று லூக்கா நற்செய்தி 6:39-45 எடுத்துரைக்கின்றது. “ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். என்பதைப் போல , நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றையே எடுத்துக்கொடுப்பர்.

வாழ்வு தரும் இறைவார்த்தை நம் உள்ளங்களில் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து கிறிஸ்து அரசின் குருக்களாக பணி செய்பவர்களாக நாம் திகழ மன்றாடுவோம்.✝

**இன்றைய விவிலிய குறிப்பு:**

சீராக்: 27: 4-7;

திபா: 92:2-3, 13-14, 15-16

1 கொரி:15:54-58;

லூக்: 6:39-45

**வாரம் ஒரு வசனம்**

**நம்முடைய திருமுழுக்கினால் நாமும் மறு கிறிஸ்துவாக மாறுகிறோம்.**

INTERNAL CIRCULATION ONLY

BUL 09/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team

api@archkl.org




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ


# *2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
# *திருமுழுக்கு அளித்து அனுப்புதல்*
## *2019 மார்ச்சு (பங்குனி) மாதத்தின் கருப்பொருள்:*
# *சிலுவையைச் சுமக்க பலப்படுத்துகிறது*

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 8ஆம் ஞயிறு (ஆண்டு 3) சனி 02-03-2019 - ஞாயிறு 10-03-2019**
சீராக் : 27: 4-7   தி.பா: 92: 1-2, 12-13, 14-15   1 கொரி: 15: 54-58   லூக்கா : 6: 39-45
**" ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று " - திபா 92**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 02 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித அலோசியஸ்) | |
| ஞாயிறு | 03 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித ஹென்றி )<br>திருப்பலி (ஆ) (புனித பெனடிக்ட்)<br>திருப்பலி (சீ)<br>திருப்பலி (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 04 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 05 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 06 | **திருநீற்றுப் புதன் (உண்ணா நோன்பு நாள்) : காலை 6.45 (ஆ), மாலை 6.00 (அனைத்து மொழிகள்), இரவு 8.00 (த)** | | |
| வியா | 07 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 08 | காலை திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.00 மணி திருச்சிலுவைப் பாதையும் தொடர்ந்து திருப்பலியும் (அனைத்து மொழிகள்)*** |

**தவக்காலம் 1ஆம் ஞாயிறு (ஆண்டு 3)**
இ.ச : 26: 4-10   தி.பா: 91 : 1-2, 10-11, 12-13, 14-15   உரோ: 10: 8-13   லூக்கா : 4: 1-13
**" துன்ப வேளையில் என்னோடு இருந்தருளும், ஆண்டவரே " - திபா 91**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 09 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித சிசிலியா) | |
| ஞாயிறு | 10 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (புனித யோசேப்பு)<br>திருப்பலி (ஆ) (இளைஞர் குழு)<br>திருப்பலி (சீ)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

### *2019 மார்ச் (பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*

1) பங்கு காணிக்கை:
அ) 23/24 பிப்ரவரி 2019 ரிம: 9,620.00 தித்தி ரிம:71.00
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**ஆ) சமூக அக்கறைப் பணிக்குழுவினரின் நிதிக்காக 02/03 மார்ச் 2019 திருப்பலிகளில் இரண்டாவது காணிக்கை எடுக்கப்படும்.**
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**2) புனித ஜோசப் கைவேலை செய்யும் உதவியாளர்கள் -** இவர்கள் ஏழைகள் மற்றும் உதவி தேவைப்படுவோருக்காக நிதிதிரட்ட வீடு பழுதுபார்க்கும் வேலைகளைச் செய்கிறார்கள்.இவர்கள் பங்கு மனித வளமேம்பாட்டுப்பணிக் குழுவினரோடு இணைந்து பணி செய்கின்றனர். இவர்களின் திறனைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புவோர் தொடர்புகொள்ள: ஸ்பென்சர் (012- 325 6718) ஜோன் டேவிட்சன் (017 615 8961)

**4) நம் உணவு விடுதியில் தூய்மையைக் கடைப்பிடிப்போம்.**
உணவு வாங்க வரும்போது வரிசையில் வரவும். உணவு உண்டபின் தட்டுகள்/குவளைகள் ஆகியவற்றை அதற்கென வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் வைக்கவும்

**5) துன் தான் செங் லோக் தாதியர் பயிற்சிக் கல்லூரி, அசுந்தா மருத்துவமனை** - முழு கல்வி உதவித்தொகை - 3 ஆண்டு முழு நேர டிப்ளமோ தாதியர் கல்வி - ஆர்வமுடையோர்www.assuntacollege.edu.my இந்த மின்னஞ்சல் அல்லது தொபேசி:தொடர்புக்கு: 03-7872 3078 பதிவுகள் 15-04-2019 முதல் 01-07-2019 நடைபெறும்.

6) எழுப்புதல் - நெகிரி இளைஞர் பேரணி (28-30 ஜுன்) NUBE போர்ட்டிக்சன் - அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னும் பதிவுகள் நடைபெறும். தொடர்பு: சபரீனா 013- 288 7624 - இதனையொட்டி, இளைஞர்கள் காலை உணவு விற்பனை செய்கின்றனர். நாள்:10-03-2019 - வாங்கி ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்**
1) பெஞ்சமின் நெடுஞ்செழியன்: இறப்பு: 24/2/19
2) திரேசாமேரி நல்லதம்பி இறப்பு: 27/2/19
**முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக**

இன்று திருப்பலியை வழி நடத்திய புனித ஹென்றி அதிசய வினருக்கு நமது நன்றிகள்

- **2019 தவக்கால கருப்பொருள்:** லாவ் டா தோ சி - நம்முடைய அன்னை பூமியான இயற்கையைப் பாதுகாப்போம். நம்முடைய பொது இல்லமான பூமிக்கு அக்கறைக் காட்டுவோம். - கிறிஸ்துவை அறிந்து அவரின் பணியாளர்களாகப் பணி செய்தல்.

- **2019 தவக்கால தியானங்கள்: திருமுழுக்கு அளித்துஅனுப்புதல்**
  - மார்ச் 12 (செவ்வாய்) மாலை 6.00 - 10.00 வரை (சீனமொழி)அருட்திரு ஜோன் யாவ் (மலாக்கா)
  - மார்ச் 23 (சனி) பகல் 2.00 - 9.00 வரை (ஆங்கிலம்) அருட்திரு போல் ரோபின்சன் (மட்டக்களப்பு, இலங்கை)
  - மார்ச் 24 (ஞாயிறு) காலை 10.00 - 4.00 வரை (தமிழ்) அருட்திரு போல் ரோபின்சன் (மட்டக்களப்பு, இலங்கை)
  - மார்ச் 23/24 (தேமொழி) (தேமொழி அதிசவினர் மற்றும் மாணவர்கள்) அருட்திரு கிளேரன்ஸ் (ஜோகூர் பாரு)

- **தூதுரைப்பணி ஆண்டு:**
  - உங்களின் விண்மீனை மறந்துவிட வேண்டாம்
  - தனிப்பட்ட செபத்திற்கு நேரம் ஒதுக்குங்கள்
  - இந்த ஆண்டில் ஒரு உருவாக்கப் பயிற்சியிலாவது கலந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்
  - நம்பிக்கைக்கு சாட்சி பகரும் வகையில் ஒரு புனிதர் அல்லது விசுவாசமிக்க ஒரு நபரைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்
  - தர்மகாரியம்/இரக்க செயலில் ஈடுபடுங்கள்
  - நீலாய், புனித திரேசா ஆலயத்திற்கு புனித யாத்திரை செல்லுங்கள் (கூடுதல் விவரங்கள் விரைவில்)

- **சமயங்களுக்கிடையிலான உரையாடல் பணிக்குழுவினரின் கோல்ஃப் விளையாட்டுப் போட்டி** நெகிரி செம்பிலான் பணிக்குழுவினர் இதை ஏற்பாடு செய்கின்றனர். நாள்:06-04-2019 காலை 7.00 மணி. சிரம்பான் இண்டர்னேஷனல் கோல்ஃப் கிளப் (SIGC). நபர் ஒருவருக்கு கட்டணம் ரிம:250/- (காலை உணவு/பகல் உணவு/பரிசுப்பை உள்ளடக்கியது.) மற்றும் கணகவர் பரிசுகள். கோல்ஃப் விளையாடும் அனைவரையும் இதில் கலந்து ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம். தொடர்புக்கு: தயாளன் (017- 8809 454) கிறிஸ்டோபர் கே (019-6216 194)

- **நீலாய், புனித திரேசா ஆலயம்- 2019 தூதுரைப்பணி ஆண்டில் அதிகாரப்பூர்வ தூதுரை ஆலயம்** புனித திரேசா தூதுரைப்பணியின் பாதுகாவலி. இந்த ஆலயத்திற்கு திருயாத்திரை மேற்கொண்டு, திருப்பலியில் கலந்து, செபித்து, தூதுரைப்பணியில் நாமும் பங்குகொள்வோம்.

- **கேளிக்கை சந்தை:** விசிடேஷன் சூப் கிச்சன் குழுவினர் ஏழை மக்களுக்கு உதவி செய்ய நிதிதிரட்டும் பொருட்டு இதை ஏற்பாடு செய்கின்றனர். நாள்:23/24 & 30/31 மார்ச் 2019. உங்களிடம் உள்ள பயன்படுத்திய/புதிய துணிகள், புத்தகங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் (நல்ல நிலையில் உள்ளவை, விற்பதற்கு ஏற்ற முறையில் உள்ளவை) ஆகியவற்றை தந்து உதவவும். பொருட்களை சேர்க்கும் இடம்: ஆலய உணவு விடுதிக்கு முன்.
  செவ்வாய் கிழமைகளில் மார்ச் 5,12,19 (காலை 8.00 - 12.00 வரை)
  சனிக் கிழமைகளில் மார்ச் 9 & 16 (காலை 10.00 - 12 .00 வரை)
  ஞாயிற்றுக் கிழமைகளில் மார்ச் 10 & 17 (காலை 8.00 - 11.00 வரை)

- **அருட்திரு ஜோர்ஜ் அவர்கள் வத்திக்கான்** (உரோமை) மாநாட்டில் கலந்துகொள்கிறார் மார்ச் 5- 11 வரை.
- **குருக்களின் மாதாந்திர தியானம்** - 19 & 20 மார்ச் APC, கோலாலம்பூர்
- **மினவுதல் தேவாலயத்தில் தவக்கால ஒப்புரவு அருளடையாளம்:** 01/04/2019 (திங்கள்) மாலை 6.00 மணி திருப்பலி- ஒப்புரவு அருளடையாளம்